Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 61/2019**

வழக்கு சாட்சி எண். PW9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுல் | கிராமம் | : | மொரப்பூர் |
| தந்தை பெயர் | : | ரவி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 37 | மாவட்டம் | : | தருமபுரி |

இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 4ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது

(எதிரிகள் 1 முதல் 3, 5,6 ஆஜர் இல்லை. எதிரிகள் 1 முதல் 3, 5,6 சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2**1th Day of July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மொரப்பூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மொரப்பூர் காவல் நிலைய குற்ற எண். 57/2016 ச/பி 147, 294(b), 323, 324 506(2) இதச @ ச/பி 147, 294(b), 324, 506(2) இதச வழக்கின் புலன் விசாரணை அலுவலரான காவல் உதவி ஆய்வாளர் ராஜகோபால் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் பழனிசாமி ஆகியோர் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இவ்வழக்கு 7 வருடங்களாக நிலுவையில் உள்ளதாலும் புலன்விசாரணை அலுவலர்கள் முறையே ராஜகோபால் அவர்கள் இறந்ததாலும் மற்றோருவரான ஆய்வாளரான பழனிசாமி அவர்கள் பணி மூப்பு அடைந்ததாலும் இன்று நான்

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 03.02.2016ம் தேதி இரவு சுமார் 8 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சிகாமணி நிலைய அலுவலலில் இருந்தபோது, தருமபுரி அரசு மருத்துவக்க்லூரி மற்றும் மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் படி, அங்கு சிகிச்சையில் இருந்த செட்ரப்பட்டி கிராமத்தை சேர்ந்த ராஜு என்பவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சிகாமணி பரிசீலனை செய்து மொரப்பூர் காவல் நிலைய குற்ற எண் 57/2016 சட்ட பிரிவுகள் 147, 294(b), 323, 324 506(2) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை ஏற்கனவே அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.**

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் 04.02.2016ம் தேதியன்று சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெங்கடேசன் மற்றும் கோவிந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, வாக்குமூலம் பதிவு செய்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார். **மாதிரிவரைபடம் அசாஆ 7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது, பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் கண்ட எதிரிகள் மாண்புமிகு உயர் நீதிமன்றம், சென்னை அவர்களிடம் எதிரிகள் 1,2,3,4,6 வரையிலானவர்கள் உயர் நீதிமன்ற முன்பிணை மனு எண் Crlop.No 2785/2016என்ற எண்ணில் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். 5ம் எதிரி பிரதீஷ்யை காவல் உதவி ஆய்வாளர் ராஜ்கோபால் கைது

செய்து, பின்னர் இந்நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி பிணையில் சென்றுள்ளார்.

பின்னர் இவ்வழக்கின் மருத்துவ சாட்சி ராம்நாத் என்பவரை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பழனிசாமி விசாரித்து காயச்சான்றிதழ்கள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி காயச்சான்றிதழ்கள் ஏற்கனவே 4 மற்றும 5 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. சட்டபிரிவு மாறுதல் அறிக்கை இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ச/பி 147, 294(b), 323, 324 506(2) இதச 1860 லிருந்து ச/பி 147, 294(b), 324, 506(2) இதச ஆக மாற்றியுள்ளார். **மேற்படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ-8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து ச/பி 147, 294(b), 324, 506(2) இதசவின் கீழ் எதிரிகள் 1. கைலைமன்னன், 2. தேவகி, 3. ஜகதீஸ்வரி, 4. பாஸ்கர், 5. பிரதீஸ், 6. ஆறுமுகம் ஆகியோர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யவில்லை. வழக்கின் சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை. நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அசா1 கொடுத்த புகாரின் மீது வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளாமலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்காமலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்திலே தயார் செய்து எதிரிகள் மீது தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**